ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை,
தமிழ்நாடு அரசு.

www.tnrd.gov.in






# அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்


## நான்கு ஆண்டு சாதனைகள் (2006–07 முதல் 2009–10 வரை)

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, தமிழ்நாடு அரசு.






























நன்றி

**“கண்ணால் காண்பதே மெய்”** என்பது புதுமொழி.

தமிழ்நாடு அரசின் முன்னோடித் திட்டமான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் 2006–07 முதல் 2009–10 வரை நான்கு ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்ட பல்வேறு பணிகள் குறித்த ஆவணத் தொகுப்பே இக்கையேடு ஆகும்.

பயனுள்ள இக்கையேட்டினை வெளிக்கொண்டுவரத் தேவையான புள்ளி விபரங்களையும், புகைப்படங்களையும் அளித்திட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் திரு. ககன் தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்களுக்கும், இதனை அழகுற வடிவமைத்து அச்சிடும் பணியை சீரிய முறையில் மேற்பார்வையுமிட்ட, மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் திரு. ச. சட்டநாதன் அவர்களுக்கும், மேலும் பல்வேறு வழிகளில் எனக்கு உறுதுணையாயிருந்த இத்துறையின் பிற பணியாளர்களுக்கும் எனது நன்றியினை தெரிவிக்க விரும்புகிறேன்.

**க. அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப.,**
அரசு முதன்மைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை,
தமிழ்நாடு அரசு.

# அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

## நான்கு ஆண்டு சாதனைகள் (2006–07 முதல் 2009–10 வரை)

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, தமிழ்நாடு அரசு.




அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர். கலைஞர். மு. கருணாநிதி அவர்கள்
2007 சனவரி 21ஆம் நாள் வேலூர் மாவட்டம், திருமாதலம்பாக்கம் கிராமத்தில் தொடங்கி வைத்தார்.

உள்ளத்தில் உருவானதைக் களத்தில் காண்கிறார், மாண்புமிகு துணை முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.














# ஒரு கனவு நனவாகிறது . . .

"ஒருவர் வெளிநாடுகளுக்குச் சென்று ஒரு கிராமத்தைப் பார்த்தால் அங்கே நகரத்துக்கும் கிராமத்துக்கும் வித்தியாசம் தெரியாத அளவிற்கு கிராமங்களிலே அழகான வீடுகள், தெருக்கள், கடைகள், உணவு விடுதிகள், தங்குமிடங்கள், இரயிலடிகள், பேருந்து நிலையங்கள், சாலைகள் இத்தனையும் நகரத்திற்கு நிகராக கிராமங்களில் இருக்கிறது. அதனால் கிராமத்து மக்கள் நகரத்துக்கு செல்ல வேண்டும், அங்கே குடியேற வேண்டும் என்ற ஆசையால் தூண்டப்படுவதில்லை. அதனால் நகரங்களில் நெருக்கடி ஏற்படுவதில்லை. கிராமங்களே நகரத்தைப் போல உருவாகும்பொழுது, கிராம மக்களுக்கு நகர வாழ்க்கை தேவையில்லாமல் போய்விடுகிறது."

**–டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி**

ஊரக வளர்ச்சித் திட்டங்களை மிகச் சிறப்பான முறையில் செயல்படுத்திடும் மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு திகழ்கிறது. தமிழ்நாடு அரசு செயல்படுத்திய பல திட்டங்கள் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்குவது மட்டுமின்றி அவை மத்திய அரசால் தேசிய அளவில் விரிவுபடுத்தப்பட்டதும் தனிச்சிறப்பாகும். இத்தகைய முன்னோடித்திட்டங்களில் ஒன்று தான், முற்றிலும் மாநில அரசின் நிதியைக் கொண்டு 2006–07ஆம் ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்பட்டு வரும் 'அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்'.

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்களின் சிந்தனையில் உருவான இந்த மகத்தான திட்டத்தினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கடந்த 2007ஆம் ஆண்டு ஜனவரி 21ஆம் நாளன்று வேலூரில் நடைபெற்ற மாபெரும் விழாவில் தொடங்கி வைத்தார். மாநிலத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் அவற்றுக்குத் தேவையான மிக முக்கியமான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருவதன் மூலம் ஊரக மற்றும் நகர்ப்புறங்களிடையேயான இடைவெளியினைக் குறைத்து ஊரக வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். சுருங்கக் கூறின், இத்திட்டம் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் கனவை நனவாக்கிட எடுக்கப்படும் ஒரு சீரிய முயற்சியாகும். எடுத்துக்காட்டாக, வரும் 2011ஆம் ஆண்டு இத்திட்டம் முடிவுடையும்பொழுது தமிழ்நாடு, நாட்டிலேயே ஊராட்சிக்கு ஒரு நூலகம் மற்றும் ஒரு விளையாட்டு மையம் அமையப் பெற்ற ஒரே மாநிலமாகத் திகழும்.

நிதி ஆதாரங்களை அனைத்து ஊராட்சிகளுக்கும் பரலாக பகிர்ந்தளிப்பதினால் ஒவ்வொரு ஊராட்சியும் குறைந்த அளவிலான நிதியினைப் பெற முடிகிறது. இதனால் கிராம ஊராட்கிளில் முக்கிய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள இயலாத நிலை ஏற்படுகிறது. இதைத் தவிர்க்கும் வகையில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் 2006–07–ம் ஆண்டிலிருந்து தொடங்கி இத்திட்டம் முடிவடையும் 2010–11–ம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டிலும் தமிழகத்தில் உள்ள மொத்த கிராம ஊராட்சிகளில் 5–ல் ஒரு பங்கு ஊராட்சிகளத் தேர்ந்தெடுத்து இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. எந்த வித விருப்பு வெறுப்பிற்கும் இடமின்றி தனி நபர் வருமானத்தின் ஏறுவரிசைப் படி (அந்தியோதயா அணுகுமுறை) கிராம ஊராட்சிகள் இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படுகின்றன

| வ.எண் | ஆண்டு | அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | ஆண்டு ஒன்றுக்கு மாநில நிதி ஒதுக்கீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | 2006–07 | 2,540 | 513.80 |
| 2 | 2007–08 | 2,534 | 511.87 |
| 3 | 2008–09 | 2,520 | 509.04 |
| 4 | 2009–10 | 2,510 | 507.02 |
| 5 | 2010–11 | 2,514 | 507.83 |
| | மொத்தம் | 12,618 | 2548.83 |

மாநில அளவில் ரூ.500 கோடி நிதி ஒதுக்கீட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு ஊராட்சிக்கும் ரூ.20 இலட்சம் என்ற அளவில் கணிசமாக நிதி ஒதுக்கீடு செய்து செயல்படுத்தப்படும் திட்டமாகும். 'மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்' நீங்கலாக தற்போது நடைமுறையில் இருக்கும் மத்திய , மாநில அரசின் மற்ற திட்டங்களைக் காட்டிலும் மிகப்பெரியது. இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994–ன்படி கிராம ஊராட்சிகள் செயல்படுத்தப்படவேண்டிய கிராம நூலகம் விளையாட்டு மையம் இடுகாடு/சுடுகாடு நீர் சேகரிப்பு அமைப்புகள் மற்றும் குடிநீர் வசதிகளைப் பெருக்குதல் ஆகியவற்றை செயல்படுத்த முடியும். மேற்கண்ட சட்டபூர்வ கடமைகளை நிறைவேற்றும் பணிகளுக்காக ரூ.15 இலட்சமும் உள்ளூர் தேவைகளையொட்டி தேர்ந்தெடுக்கப்படும் சிமெண்ட் கான்கீரிட் தெருக்கள், தெரு விளக்கு வசதிகள், மீன் வள மேம்பாடு, கதிரடிக்கும் களங்கள், பயணியர் நிழற் குடைகள், கிராமக் கலையரங்குகள், கிராமச் சந்தைகள், சிறுபாலங்கள் போன்றவற்றை விருப்ப பணிகளாக எடுத்து நிறைவேற்றிட ரூ.5 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மட்டுமின்றி நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணி, சமூக நலம், மக்கள் நல்வாழ்வு, கல்வி, வேளாண் பொறியியல் மற்றும் குடிநீர் வடிகால் வாரியம் போன்ற பிற துறையினரால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் மூலமாகவும் நிதி ஆதாரங்களை இயன்றவரை ஒருங்கிணைத்து இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இவ்வாறு தேர்வு செய்யப்பட்ட ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் குறைந்தது ரூ. 60 இலட்சம் முதல் ரூ. 1 கோடி வரை நிதி ஆதாரங்கள் ஒருங்கிணைக்கப்படுகிறது. மேலும் ஒவ்வோர் ஆண்டும் ரூ. 400 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் கிராம ஊராட்சிகளின் அணுகு / இணைப்புச் சாலைகளை புதிதாக அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கிராம ஊராட்சிகள் முழுமையான வளர்ச்சியைப் பெற்றிட வேண்டும் என்பதே இத்திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும்.

நிதி ஆதாரங்களை அறிவுப்பூர்வமாக ஒருங்கிணைத்தால் இமாலய வெற்றி பெற முடியும் என்பதற்கு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஓர் சிறந்த சான்று.

''எனது எண்ணத்தில் உள்ள கிராம சுயாட்சி என்பது தன்னுடைய தேவைகளுக்கு, அருகாமையிலுள்ளவர்களை சார்ந்திராமலும் அதே நேரத்தில் அத்தியாவசிய தேவைகளுக்காக மட்டுமே ஒன்றுக்கொன்று பிணைப்புடன் இருக்கக்கூடிய சுதந்திரமான கிராமக் குடியரசுகளாகும். அவற்றில் தனது கால்நடைகளுக்குத் தேவையான மேய்ச்சல் நிலங்கள், பெரியவர்கள் மற்றும் சிறியவர்களுக்கான பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டு மைதானங்கள் இருக்க வேண்டும். கிராம அரங்கங்கள், பள்ளிகள் மற்றும் பொதுநலக் கூடங்களை கிராமங்களே பராமரிக்க வேண்டும். சுத்தமான குடிநீர் விநியோகிக்கும் பொருட்டு தனக்குச் சொந்தமான நீர் நிலைகளைக் கொண்டிருக்க வேண்டும். இதற்கான ஏரிகள் மற்றும் கிணறுகளை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.''

**–மகாத்மா காந்தி**







# நீர் சேகரிப்பு அமைப்புகள்

*ஊரணி நீர்நிறைந் தற்றே உலகுஅவாம்*
*பேரறி வாளன் திரு. -திருவள்ளுவர்*

பசுமைப் புரட்சிக்கும், வறுமை ஒழிப்புக்கும் அச்சாணியாக விளங்குகின்ற நீர் நிலைகளே மனித சமுதாயத்தின் உண்மையான ஆலயங்களாகும். அவ்வாறான நீர்ப்பாசன ஏரிகள், குளங்கள், குட்டைகள், ஊரணிகள் மற்றும் கோயில் குளங்கள் போன்ற நீர் சேகரிப்பு அமைப்புகள் பல ஆண்டுகளாக பராமரிப்பு இன்றியும், நிதிப் பற்றாக்குறையினால் தூர் வாரப்படாமலும் இருந்ததால் நிலத்தடி நீர் குறைந்து இவை அனைத்தும் பொது மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் சமூக விரோதிகளால் ஆக்கிரமிக்கப்பட்டு வந்தது. நீர் நிலைகளைப் புனரமைத்தல் அல்லது தேவைக்கேற்ப புதியதாக உருவாக்குதல் போன்ற பணிகளை அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் கட்டாயமாக்கப் பட்டிருப்பதன் மூலம் கிராமப்புற மக்களின் நீண்ட நாள் தேவையை நிறைவேற்றிட அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.







தேர்வு செய்யப்பட்ட ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஒரு நீர் சேகரிப்பு அமைப்புப் பணியாவது ரூ. 3 இலட்சம் முதல் 5 இலட்சம் வரையிலான மதிப்பீட்டில் மேற்கொள்ள வேண்டும். குளம் அல்லது ஊரணி மேம்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றாலும், குறிப்பிட்ட ஊராட்சிகளில் அவை இல்லாத நிலையில் கோயில் குளங்கள், சிறு பாசனக் குளங்கள் அல்லது பெரிய தடுப்பணைகள் அமைக்கும் பணிகளும் மேற்கொள்ளலாம்.


இத்திட்டத்தின் கீழ் அழகுற அமைக்கப்பட்ட குளம் அல்லது ஊரணி கீழ்க்கண்ட சிறப்பு அம்சங்களுடன் காணப்படும்:

- தற்பொழுதுள்ள நிலையை விட குறைந்தபட்சம் 2 மீட்டர் ஆழத்தில் ஒரு பெரிய குளம்.
- பெரிய குளத்தின் நீள அகலங்களில் பாதி அளவில் அதைவிட மேலும் ஒரு மீட்டர் அதிக ஆழத்தில் அமைக்கப்படும் சிறு குளம்.
- நீர் நிரம்பிய நிலையில் குளத்தின் கரைகள் சரிந்து விழாவண்ணம் கருங்கற்கள்/முண்டு கற்களைக் கொண்டு கரைகளைப் பலப்படுத்துதல்.
- குளத்திற்கு ஒரு படித்துறை
- படித்துறையிலிருந்து கோடைக்காலத்திலும் நீரைப் பயன்படுத்த சிறு குளத்திலிருந்து வாய்க்கால் வசதி
- குளம், ஊரணிகளோடு சேர்ந்து வரத்துக் கால்வாய்கள் மற்றும் வெளிச்செல்லும் வாய்க்கால்கள் தூர்வாருதல்
- கரையைப் பலப்படுத்திட குளத்தின் ஒன்று அல்லது மேற்பட்ட கரைகளில் கருங்கல் தடுப்புச் சுவர்
- மக்கள் பயன்பாட்டிற்காக குளக்கரைகளின் மேல் கான்கிரீட் இருக்கைகள்.

**அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் சீரமைக்கப்பட்ட குளங்கள் / ஊரணிகள்**

| வ. எண். | ஆண்டு | சீரமைக்கப்பட்ட குளங்கள் / ஊரணிகளின் எண்ணிக்கை | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1 | 2006–07 | 2,599 | 88.79 |
| 2 | 2007–08 | 2,546 | 91.27 |
| 3 | 2008–09 | 2,520 | 121.31 |
| 4 | 2009–10 | 2,510 | 115.71 |

- 2010–11ஆம் ஆண்டில் மீதமுள்ள 2,514 கிராம ஊராட்சிகளிலும் புதிய குளங்கள் அமைத்தல், குளங்கள் / ஊரணிகள் சீரமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.












## திட்டத்தின் தாக்கம்

நீர் சேகரிப்பு அமைப்புகளை சீரமைத்தல் மற்றும் மேம்பாட்டு பணிகள் மூலம் ஏற்பட்ட பயன்கள்:

- ✦ பயனற்ற நீர் அமைப்புகளையும் கோயில் குளங்களையும் பயனுக்குக் கொண்டு வந்தது.
- ✦ குளத்தினுள் அமைந்துள்ள சிறுகுளத்தின் பயனாக கோடை காலத்திலும் தொடர்ந்து நீர்வளம் நிறைந்திருப்பது.
- ✦ நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்திருப்பது
- ✦ விலை மதிப்பில்லாத நீர் சேகரிப்பு அமைப்புகளை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டது.
- ✦ கழிவு நீர்க் குட்டைகள் நன்னீர் நிலைகளாக மாற்றப்பட்டது.

**திட்டக்கூறு :** குளம் / ஊரணி / குட்டை

- இப்பணி மேற்கொள்வதை கட்டாயமாக்கியது
- கோடையிலும் வற்றாத சிறுகுளம்
- கிராமத்தின் களங்கம் முழு நிலவின் ஒளியாக மாறியது


















# இடுகாடு மற்றும் மயானக் கொட்டகைகள்

*நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்*
*பெருமை உடைத்து இவ் வுலகு. – திருவள்ளுவர்*

இறந்தவர்களுக்கான இறுதி மரியாதையை உரிய முறையில் செய்திடுவதே நீத்தார் நினைவுச் சடங்குகளின் அடிப்படை. மீளாத் துயில் கொள்வோரின் நிரந்தர முகவரியை பசுமையோடு பாதுகாப்பது பண்பாட்டின் அடையாளம். சுடுகாடு மற்றும் இடுகாடுகளை உருவாக்கிப் பராமரிப்பதென்பது கிராம ஊராட்சிகளின் சட்டப்பூர்வமான கடமைகளில் ஒன்றாக இருப்பினும், இந்த வசதிகள் தமிழ்நாட்டின் எந்த ஒரு கிராம ஊராட்சியிலும் முறையாக இல்லாமலிருப்பது தெரிய வந்தது. எனவே இத்திட்டத்தினை உருவாக்கிடும்பொழுது, ஒவ்வொரு ஊராட்சியிலும் குறைந்தது ஒரு தகன மேடையுடன் கூடிய சுடுகாடு / இடுகாடு கட்டாயம் அமைக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. இன்று தமிழகத்தின் கிராமப்புற நிலத்தோற்றத்தில், விடைபெற்ற தமிழர் வாழ்ந்த வாழ்க்கையின் உயர்ந்த அடையாளமாய் எழுந்து நிற்கும் ஆயிரக்கணக்கான உயிர் நீத்தோர் நினைவிடங்களில் கீழ்க்கண்ட வசதிகள் எல்லாம் அமைந்துள்ளன:













- இடுகாட்டின் நுழைவு வாயிலிலிருந்து எரிமேடை வரை குறைந்தது 50 மீட்டர் நீளம் கொண்ட சிமெண்ட் கான்கிரீட் அணுகு சாலை.
- பிரதான வாயில் அமைந்துள்ள பக்கத்தில் சுற்றுச்சுவர் மற்றும் எல்லைகளைக் குறிக்க சிமெண்ட் கான்கிரீட் தூண்கள்.
- சுடுகாட்டில் கடும் வெப்பத்தை தாங்கக்கூடிய செங்கல் மற்றும் மணலால் ஆன எரிமேடை, நான்கு தூண்கள் மற்றும் புகை போக்கி வசதிகளுடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் கூரை மற்றும் எரிமேடையைச் சுற்றிலும் சிமெண்ட் கான்கிரீட் நடைபாதை. தேவைப்படின் இடுகாட்டில் காத்திருப்புக் கூடம்.
- இறுதிச் சடங்குகளுக்காக கைப்பம்புகள் மூலம் தண்ணீர் வசதி.
- தேவைக்கேற்ப மின்விளக்குகள் அமைத்தல்.
- தேவைப்படின் வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ஊராட்சியின் பிற பகுதிகளில் கூடுதல் மயான வசதி/எரி மேடை வசதி.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள மயான மேம்பாட்டுப் பணிகள்

| வ. எண் | ஆண்டு | அமைக்கப்பட்டுள்ள மயானங்களின் எண்ணிக்கை | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | 2006–07 | 4,482 | 75.32 |
| 2 | 2007–08 | 3,850 | 70.64 |
| 3 | 2008–09 | 3,531 | 74.31 |
| 4 | 2009–10 | 3,531 | 79.60 |

- 2010–11ஆம் ஆண்டில் மீதமுள்ள 2,514 கிராம ஊராட்சிகளிலும் மயான மேம்பாடு/எரிமேடை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**திட்டக்கூறு :** மயான மேம்பாடு/ எரிமேடை

- கூடுதல் வசதிகளாக கான்கிரீட் சாலை வசதி, உயரமான எரிமேடை, சுற்றுச்சுவர், குடிநீர் மற்றும் விளக்கு வசதிகள்
- இருள் விலகிட , மழை உதவிட தொடரும் ஈமச்சடங்குகள்
- வந்தாரை வாழ வைக்கும் தமிழர் மரபு, வாழ்ந்தோரை வழியனுப்புவதிலும் தொடர்கிறது




# நூலகங்கள்

*எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்*
*கண்ணென்ப வாழும் உயிர்க்கு. –திருவள்ளுவர்*



பேரறிஞர் அண்ணா ஒரு நடமாடும் நூலகம். அவர் பெயரால் அமைந்திட்ட இத்திட்டத்தின் மூலமாக அறிவார்ந்த தமிழ்ச் சமூகத்தினை உருவாக்கிட கிராமந்தோறும் ஒரு நூலகம் என்ற உன்னத நோக்கம் நிறைவேற்றப்படுகின்றது. 2006–07ஆம் ஆண்டின் துவக்கத்தில் பொது நூலகத் துறையால் சுமார் 1000 நூலகங்கள் மட்டுமே கிராமப்புறங்களில் செயல்பட்டிருந்த நிலை மாறி இத்திட்டம் முடிவடையும் 2010–11ஆம் ஆண்டில் ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஒரு நூலகம் அமைத்திட்ட பெருமையினை அடைந்த முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்கும்.









**அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட நூலகத்தின் முக்கிய அம்சங்கள்:**

- புத்தக அலமாரிகள் மற்றும் பரண்கள் வசதியுடன் 400 சதுர அடி பரப்பளவிற்குக் குறையாமல் புதிய நூலகக் கட்டிடம். இதே பரப்பளவுள்ள கட்டடங்கள் ஏதேனும் இருப்பின் பராமரிப்பு செய்து நூலகமாக பயன்படுத்தலாம்.
- ஒவ்வொரு நூலகத்திற்கும் ரூ.50,000 மதிப்பீட்டில் மேசை, நாற்காலிகள், புத்தக அலமாரிகள்.
- ஒவ்வொரு நூலகத்திற்கும் ஓய்வு பெற்ற அலுவலர் அல்லது ஆசிரியர் ஒருவர் மாதம் ரூ.750/– மதிப்பூதியத்தில் மதிப்புறு நூலகராக நியமிக்கப்படுகிறார்.
- திருக்குறளிலிருந்து ‘கல்வி’ குறித்த பொருத்தமான குறள்கள் நூலகச் சுவர்களில் தெளிவாக எழுதப்படுகின்றன.
- உலகம், இந்தியா, தமிழ்நாடு மற்றும் மாவட்ட வரைபடங்கள் நூலகங்களில் நன்கு தெரியும்படி வைக்கப்பட்டுள்ளன.
- தினசரி காலை 8 மணி முதல் மதியம் 1 மணி வரையும் மற்றும் மாலை 4 மணி முதல் 7 மணி வரை இந்த நூலகங்கள் செயல்படுகின்றன.
- ஒவ்வொரு நூலகத்திற்கும் ரூ.50,000/– மதிப்புள்ள புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. இவற்றில் குறைந்தது 85 விழுக்காடு தமிழ்ப் புத்தகங்கள் ஆகும்.

**அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நூலகங்களின் விவரம்**

| வ.எண் | ஆண்டு | நூலகங்களின் எண்ணிக்கை | தொகை (ரூ. கோடியில்) | ஒவ்வொரு நூலகத்துக்கும் வழங்கப்பட்டுள்ள / வழங்கப்படும் புத்தகங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | 2006–07 | 2,540 | 31.96 | 897 |
| 2 | 2007–08 | 2,534 | 40.18 | 897 |
| 3 | 2008–09 | 2,520 | 75.50 | 1013 |
| 4 | 2009–10 | 2,510 | 79.78 | 1013 |

- 2010–11ஆம் ஆண்டில் மீதமுள்ள 2,514 கிராம ஊராட்சிகளிலும் நூலகங்கள் அமைக்கப்படும்.

## அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகங்களுக்கான புத்தகங்கள்

சிறந்த வல்லுநர்களைக் கொண்ட மாநில அளவிலான குழு அமைக்கப்பட்டு, அதன் மூலம் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட நூலகங்களுக்கான புத்தகங்களைத் தேர்வு செய்து கீழ்க்கண்ட தலைப்புகளின் கீழ் பிரித்து வழங்கப்பட்டுள்ளன. 1) சிறுவர்களுக்கான புத்தகங்கள் 2) இளைஞர்களுக்கான புத்தகங்கள் 3) மேற்கோள் புத்தகங்கள் 4) சுய மேம்பாட்டிற்கான புத்தகங்கள் 5) சிறந்த எழுத்தாளர்களால் எழுதப்பட்ட புத்தகங்கள் 6) பிரபலமானவர்கள் பற்றிய புத்தகங்கள் 7) கதை புத்தகங்கள் 8) கதை அல்லாத புத்தகங்கள் 9) செவ்வியல் இலக்கியங்கள் மற்றும் 10) கவிதைகள்.

இது தவிர மாவட்ட ஆட்சியர்கள், நூலகங்களுக்கு நன்கொடை மூலம் புதிய மற்றும் பழைய புத்தகங்களைப் பெற நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். அரிமா சங்கம், ரோட்டரி சங்கம் மற்றும் நன்கொடையாளர்கள் மூலமாக செய்தித்தாள்கள் மற்றும் இதழ்களுக்கு சந்தா செலுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அய்யன் திருவள்ளுவர் நூலகம் போன்ற மற்ற நூலகங்களிலுள்ள புத்தகங்கள், வார / மாத இதழ்கள் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகங்களில் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

















## ஊரக நூலகப் போட்டிகள்

2006–07, 2007–08 ஆகிய 2 ஆண்டுகளில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்ட கிராம ஊராட்சிகளிலுள்ள நூலகப் பயன்பாட்டினை அதிகரிக்கவும், குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் அறிவுசார் திறமையை வெளிக்கொணரவும் ஊரக நூலகப் போட்டிகள் டிசம்பர் 2009ஆம் ஆண்டின் இரண்டாம் அரைத்திங்களில் நடத்தப்பட்டன.


**ஊரக நூலகப் போட்டிகள்– மூன்று வகையான பங்கேற்பாளர்கள் :**

- ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகள் – தற்போது 8–ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள் (சிறுவர்கள் மற்றும் சிறுமியர்கள்)
- உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் – தற்போது 9–ம் வகுப்பு முதல் 12–ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள் (சிறுவர்கள் மற்றும் சிறுமியர்கள்)
- மற்ற குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் (சிறுவர்கள் மற்றும் சிறுமியர்கள்) மேற்சொன்ன இருவகைகளிலும் சேராதவர்கள் (பள்ளிப்படிப்பை பாதியில் நிறுத்தியவர்கள் உட்பட)

**அனைத்து வகையினருக்கும் நான்கு வகையான போட்டிகள் நடத்தப்பட்டன:**

- வரைபடங்களில் இடங்களைக் கண்டுபிடித்தல்.
- அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகத்திலுள்ள புத்தகங்களின் அடிப்படையில் நினைவாற்றல் போட்டி.
- பேச்சுப்போட்டி.
- கவிதை ஒப்புவித்தல்.

**ஊரக நூலகப் போட்டிகளில் பங்கு பெற்றவர்களின் விவரம்**




**திட்டக்கூறு:** நூலகங்கள்

- குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் தங்களின் இலக்கிய திறமைகளை வெளிக்காட்டும் வகையிலான நூலக போட்டிகள்.
- நான்கு நிகழ்ச்சிகளில் கவிதைகள் ஒப்புவித்தல் நிகழ்ச்சியில் மட்டும் 1.41 இலட்சம் பேர் பங்கேற்பு.
- படிப்பைப் பாதியில் விட்டவர்களையும் போட்டியில் பங்கேற்கச் செய்தது.
- வந்தாரை வாழ வைக்கும் தமிழர் மரபு, வாழ்ந்தோரை வழியனுப்புவதிலும் தொடர்கிறது



# விளையாட்டு மையங்கள்

*மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது*
*அற்றது போற்றி உணின். -திருவள்ளுவர்*



சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு விளையாட்டும், உடல் ஆரோக்கியத்தை பேணும் குணமும் அவசியமாகும். விளையாட்டு மையங்கள் அமைக்கப்படுவது கிராம ஊராட்சிகளின் சட்டபூர்வக் கடமைகளில் ஒன்றாக இருந்தாலும், 2006–07ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் பெயரளவிற்குக்கூட விளையாட்டு மையங்கள் அமையவில்லை. இதனால் கிராமப்புற இளைஞர்களின் விளையாட்டுத் திறமைகளை வெளிக்கொணர இயலாமல் போனது. அதிலும் குறிப்பாக 2000–01ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு மையங்களும் தொடர் ஆதரவின்மையால் செயலிழந்துவிட்டன. எனவே அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு கிராமத்திலும் விளையாட்டு மையம் அமைப்பதைக் கட்டாயமாக்கியதால் ஊரகப் பகுதிகளில் விளையாட்டிற்கான உண்மையான மற்றும் உறுதியான பங்களிப்பை வழங்கியுள்ளது. 2011ஆம் ஆண்டு இறுதியில் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் தரம் வாய்ந்த விளையாட்டு மையங்கள் அமையப்பெற்று நாட்டிலேயே முதல் மாநிலமாக தமிழகம் விளங்கும். இத்திட்டத்தின் கீழ் அமையப்பெறும் விளையாட்டு மையங்களை முன்மாதிரியாகக் கொண்டு 'பஞ்சாயத்து யுவ கிரிடா அவுர் கேல் அபியா' (பைக்கா) என்ற மத்திய அரசின் திட்டம் உருவானது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எந்த ஊராட்சிகளில் அரசு உயர்நிலைப் பள்ளி அல்லது மேல்நிலைப் பள்ளி அமைந்துள்ளதோ, அங்கு பள்ளி விளையாட்டு மையம் ஏற்படுத்தப்படும். மற்ற கிராம ஊராட்சிகளில் சமுதாய விளையாட்டு மையங்கள் அமைக்கப்படும்.













**பள்ளி விளையாட்டு மையங்கள்** சுமார் ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்ட வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன:

- ✦ கைப்பந்து மைதானம்
- ✦ பூப்பந்து மைதானம்
- ✦ பெண்களுக்கான வலைப்பந்து மைதானம்
- ✦ கால்பந்து மற்றும் ஹாக்கி கோல் கம்பங்கள் மற்றும் தேவையான சாதனங்கள்
- ✦ கிரிக்கெட் விளையாட்டுப் பொருள்கள், தரை விரிப்பு மற்றும் பயிற்சி வலை
- ✦ கூடைப் பந்து மைதானம்
- ✦ நீளம் தாண்டுதல் மற்றும் உயரம் தாண்டுதலுக்கான மணற்குழி
- ✦ ஈட்டி எறிதல், வட்டு எறிதல், குண்டு எறிதல்
- ✦ மேலுந்து கம்பங்கள், இணைக் கம்பங்கள், கைப்பிடிக் குண்டுகள், பெஞ்ச் பிரஸ் பலகை மற்றும் பளு தூக்கும் கருவிகள்
- ✦ டேபிள் டென்னிஸ் மேசை
- ✦ சதுரங்கப் பலகை மற்றும் கேரம் பலகைகள் – 4 எண்கள்

**சமுதாய விளையாட்டு மையங்கள்** சுமார் ரூ.1 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்ட வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன:

- ✦ கைப்பந்து மைதானம்
- ✦ பூப்பந்து மைதானம்
- ✦ பெண்களுக்கான வலைப்பந்து மைதானம்
- ✦ நீளம் தாண்டுதல் மற்றும் உயரம் தாண்டுதலுக்கான மணற்குழி
- ✦ மேலுந்து கம்பங்கள், இணைக் கம்பங்கள், கைப்பிடிக் குண்டுகள், பெஞ்ச் பிரஸ் பலகை மற்றும் பளு தூக்கும் கருவிகள்
- ✦ சதுரங்கப் பலகை மற்றும் கேரம் பலகைகள் – 4 எண்கள்
- ✦ சிறார்களுக்கான ஏற்ற இறக்கப் பலகை, சறுக்கு மற்றும் ஊஞ்சல் – ஒரு கிராமத்திற்கு 2 வீதம்

**திட்டக்கூறு :** விளையாட்டு மையங்கள்

- உயர்நிலை அல்லது மேல்நிலைப்பள்ளிகளில் பள்ளி விளையாட்டு மையங்கள் மற்றும் இதர கிராமங்களில் சமுதாய விளையாட்டு மையங்கள்
- ஆண்டுக்கு இரு முறை – ஜனவரி மற்றும் செப்டம்பர் மாதங்களில் நடத்தப்படும் ஊரக விளையாட்டுப் போட்டிகள்
- ஆண்டு பராமரிப்பு மான்யமாக ரூ.10,000 ஒதுக்கீடு செய்து ஏற்படுத்தப்பட்ட வசதிகளை உயிர்ப்புடன் இருக்கச் செய்தல்!













## ஊரக விளையாட்டுப் போட்டிகள்

உள்ளூர் திருவிழாக் காலங்களில், ஊரக விளையாட்டு மையங்களைப் பயன்படுத்தி, விளையாட்டுப் போட்டிகள் நடத்திட கிராம ஊராட்சிகள் ஊக்குவிக்கப்படுகின்றன. மேலும், பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 மற்றும் பொங்கல் பண்டிகையின்போது என ஆண்டுக்கு இரண்டு முறை ஊரக விளையாட்டுப் போட்டிகள் தற்போது நடத்தப்பட்டு வருகின்றன.

**கீழ்க்கண்ட பிரிவுகளில் தனி நபர் மற்றும் குழுக்களுக்கான போட்டிகள் நடத்தப்படுகின்றன.**

1. நீளம் தாண்டுதல் மற்றும் உயரம் தாண்டுதல்
   i) இளையோர் – ஆடவர் ii) முதியோர் – ஆடவர்
   iii) இளையோர் – பெண் iv) முதியோர் – பெண்

2. சதுரங்கம், கேரம், 100 மீட்டர் ஓட்டப் பந்தயம்
   i) மிக இளையோர் – ஆண் ii) மிக இளையோர்–பெண் iii) இளையோர் ஆடவர்
   iv) முதியோர் – ஆடவர் v) இளையோர் பெண் vi) முதியோர் – பெண்

**குழுக்களுக்கான போட்டிகள்**

1. கைப்பந்து : முதியோர் – ஆடவர்
2. வலைப்பந்து : i) இளையோர் – பெண் ii) முதியோர் – பெண்

**ஊரக விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றவர்களின் விவரம்**

| வ. எண் | போட்டி | செப்டம்பர் 2009ல் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை | ஜனவரி 2010ல் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | கைப்பந்து | 32,465 | 30,878 |
| 2 | வலைப்பந்து | 39,149 | 43,584 |
| 3 | சதுரங்கம் | 1,44,990 | 1,89,900 |
| 4 | கேரம் | 1,67,371 | 2,14,689 |
| 5 | 100 மீட்டர் ஓட்டப் பந்தயம் | 2,69,102 | 3,03,649 |
| 6 | நீளம் தாண்டுதல் | 1,83,013 | 2,03,970 |
| 7 | உயரம் தாண்டுதல் | 1,61,904 | 1,89,363 |
| | மொத்தம் | 9,97,994 | 11,76,033 |

**அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் நிறுவப்பட்ட விளையாட்டு மையங்கள்**

| வ.எண் | ஆண்டு | சமுதாய விளையாட்டு மையங்களின் எண்ணிக்கை | பள்ளி விளையாட்டு மையங்களின் எண்ணிக்கை | மொத்த விளையாட்டு மையங்கள் | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|---|---|---|
| 1 | 2006–07 | 2,083 | 457 | 2,540 | 24.41 |
| 2 | 2007–08 | 2,044 | 490 | 2,534 | 26.71 |
| 3 | 2008–09 | 2,041 | 479 | 2,520 | 27.59 |
| 4 | 2009–10 | 2,055 | 455 | 2,510 | 28.58 |

- 2010–11–ம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் மீதமுள்ள 2,514 கிராம ஊராட்சிகளிலும் விளையாட்டு மையங்கள் அமைக்கப்படும்.







# குடிநீர் விநியோகம்

*நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்*
*வான்இன்று அமையாது ஒழுக்கு. –திருவள்ளுவர்*


பூவுலகின் அமுதம் தண்ணீரே. தமிழ்நாடு அரசு, குடிநீர் வசதிக்கு அதிக முக்கியத்துவம் வழங்கி வருகிறது. எனவே, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் கட்டாயப் பணியாக ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ரூ.1 லட்சத்துக்குக் குறையாத மதிப்பீட்டில் குடிநீர் விநியோகப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்கீழ் கைப் பம்புகள், விசைப் பம்புகள், சிறுவிசைப் பம்புகள், பொதுக் குாய்கள் போன்றவற்றைப் புதிதாக அமைத்தல்/மாற்றியமைத்தல், புதிய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் அமைத்தல், குடிநீர்க் குழாய்கள் நீட்டிப்பு செய்தல், ஆழ்குழாய்க் கிணறுகளை ஆழப்படுத்துதல்/சுத்தம் செய்தல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொள்ளலாம்.
















**அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட குடிநீர் விநியோகப் பணிகள்**

| வ. எண் | ஆண்டு | மேற்கொள்ளப்பட்ட குடிநீர் விநியோகப் பணிகள் எண்ணிக்கை | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | 2006–07 | 8,576 | 42.42 |
| 2 | 2007–08 | 7,265 | 46.48 |
| 3 | 2008–09 | 5,693 | 40.04 |
| 4 | 2009–10 | 4,820 | 40.89 |

✦ 2010–11ஆம் ஆண்டில் மேலும் 2,514 கிராம ஊராட்சிகளில் குடிநீர் விநியோகப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**திட்டக் கூறு:** குடிநீர் விநியோகம்

- மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றை நிறைவேற்றுவதும் பராமரிப்பதும்
- நான்கு ஆண்டுகளில் ஏற்கனவே முடிக்கப்பட்ட குடிநீர் விநியோகப் பணிகள் 26,217
- குடிநீர் விநியோகத்தை முறைப்படுத்தியது




















## சிமெண்ட் கான்கிரீட் சாலைகள்


கடந்த பத்து ஆண்டுகளாக, தமிழகக் கிராமங்களின் தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ள இப்பணிகள், குறைந்தபட்ச பராமரிப்புடன் நீடித்து இருக்கின்றன. கடந்த நான்கு ஆண்டுகளில், இத்திட்டத்தின் கீழ் அதிக அளவில் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு:–

**அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சிமெண்ட் கான்கிரீட் சாலைகளின் விவரம்**

| வ. எண் | ஆண்டு | அமைக்கப்பட்ட சிமெண்ட் கான்கீரிட் சாலைப்பணிகள் எண்ணிக்கை | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | 2006–07 | 9,972 | 11.74 |
| 2 | 2007–08 | 8,158 | 10.14 |
| 3 | 2008–09 | 5,519 | 6.95 |
| 4 | 2009–10 | 4,224 | 5.78 |

















# தெரு விளக்குகள்

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பாகவே தமிழ்நாட்டின் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் மின்சார வசதி வழங்கப்பட்டிருந்தாலும் பல குக்கிராமங்கள் மற்றும் புதிய குடியிருப்புப் பகுதிகள் மின்சார வசதி இல்லாமல் இருந்தன. எனவே, தமிழ்நாடு அரசு மின்வசதி இல்லாத பகுதிகளுக்கு மின் இணைப்பு வழங்கிட முன்னுரிமை அளிப்பதால் தற்போது மொத்த குக்கிராமங்களில் 99.5 விழுக்காட்டிற்கும் மேல் மின் இணைப்பு பெற்றுள்ளன. தமிழகத்தை ஒளிமயமாக்கிட அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் அனைத்து குக்கிராமங்களுக்கும் தேவையான இடங்களில் புதிய மின் கம்பங்கள் அமைத்து, தெரு விளக்கு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களான பேருந்து நிலையங்கள், கிராமச் சந்தைகள், நியாய விலைக் கடைகள், கிராம ஊராட்சி அலுவலகங்கள், ஊரக விளையாட்டு மைதானங்கள் போன்றவற்றில் சோடியம் ஆவி விளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன.

**அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட தெருவிளக்குகளின் எண்ணிக்கை**

| வ. எண். | ஆண்டு | அமைக்கப்பட்ட தெருவிளக்குகளின் எண்ணிக்கை | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | 2006–07 | 33,186 | 31.53 |
| 2 | 2007–08 | 29,316 | 27.85 |
| 3 | 2008–09 | 24,432 | 23.21 |
| 4 | 2009–10 | 20,657 | 19.62 |











# உள்நாட்டு மீன்வளம்

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, கடல் மீன்வளம் ஏறத்தாழ முழு அளவிற்கு பயன்படுத்தப்பட்டுவிட்டதால், மாநிலத்தில் ஏராளமான எண்ணிக்கையில் உள்ள குளங்கள் மற்றும் ஏரிகளின் மீன்வளத்தை பெருக்குவது அவசியமாகிறது. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் வாய்ப்பு வசதியுள்ள கிராம ஊராட்சிகளில் மீன்வளர்ப்புக்காக மீன் வளத்துறை மூலம் மீன் குஞ்சுகள் பெறப்பட்டு அவை முதிர்ச்சி அடைந்தவுடன் அதன் பயனைஅந்த ஊராட்சியைச் சார்ந்தவர்களே பெறலாம். இதில் அந்த ஊராட்சியை சேர்ந்த மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு முன்னுரிமை அளிப்பது குறிப்பிடத்தக்கது.


அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட மீன்வளக் குளங்களின் எண்ணிக்கை

| வ. எண். | ஆண்டு | மீன்வளக் குளங்கள் அமைக்கப்பட்ட எண்ணிக்கை | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | 2006–07 | 1,031 | 2.38 |
| 2 | 2007–08 | 1,097 | 2.45 |
| 3 | 2008–09 | 908 | 1.36 |
| 4 | 2009–10 | 666 | 1.51 |












## கிராமச் சந்தைகள்

கிராமப் பொருளாதாரத்தின் அச்சாணியாக விளங்கும் சந்தைகளை மேம்படுத்துதல் இத் திட்டத்தின் கீழ் ஒரு விருப்பப் பணியாகும். அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் அங்காடிகள், நிலையான மேடைகள், குடிநீர் வசதி, தெரு விளக்குகள், சாலை வசதி, வாகனம் நிறுத்தும் இடங்கள் போன்ற அடிப்படை உள் கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ளலாம்.


**அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் கிராமச் சந்தைகள் மேம்படுத்தப்பட்ட விவரம்:**

| வ. எண். | ஆண்டு | மேம்படுத்தப்பட்ட கிராமச் சந்தைகள் | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | 2006–07 | 122 | 1.21 |
| 2 | 2007–08 | 46 | 0.69 |
| 3 | 2008–09 | 32 | 0.59 |
| 4 | 2009–10 | 14 | 0.25 |











## இதரப் பணிகள்

இத் திட்டத்தின் கீழ் வரையறுக்கப்படாத நிதியாக ரூ.5 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிதியினைக் கொண்டு உள்ளூர்த் தேவைகளான சிறு பாலங்கள், கலையரங்கங்கள், வடிகால்கள், பயணியர் நிழற்குடைகள், கதிரடிக்கும் களங்கள், நியாய விலைக் கடைகள் போன்ற பணிகளை மேற்கொள்ளலாம்.

**அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இதரப் பணிகள்**

| வ. எண். | ஆண்டு | மேற்கொள்ளப்பட்ட கிராமச் சந்தைகள் | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | 2006–07 | 7,691 | 74.08 |
| 2 | 2007–08 | 6,712 | 72.09 |
| 3 | 2008–09 | 4,713 | 47.32 |
| 4 | 2009–10 | 4,381 | 51.15 |














# சாலைப் பணிகள்

ஒவ்வொரு ஆண்டும், மாநிலத்தில் உள்ள ஐந்தில் ஒரு பங்கு கிராம ஊராட்சிகளில் இத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் செயல்படுத்தப்படும் கிராம ஊராட்சிகளில் மிக மோசமான நிலையில் உள்ள ஊராட்சி, ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மற்றும் சமுதாய பொருளாதார அடிப்படையில் முக்கியமான சாலைகள், நபார்டு திட்டத்தின் ஊரக உள் கட்டமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து தார்ச் சாலைகளாக மாற்றுவதற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அந்தந்த ஆண்டில் செயல்படுத்தப்படும். அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராம ஊராட்சிகளின் சாலைகள் அதற்கடுத்த ஆண்டு நபார்டு – ஊரக உள் கட்டமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து மேம்படுத்தப்படுகின்றன. இத் திட்ட கிராம ஊராட்சிகளில் சாலைகளை மேம்படுத்துவதற்கு நபார்டு – ஊரக உள் கட்டமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.1018.93 கோடி நிதி 31.3.2010 வரை பெறப்பட்டுள்ளது.

| ஆண்டு | நபார்டு – ஊரக உள் கட்டமைப்பு வளர்ச்சி நிதியின் கீழ் சாலைப் பணிகள் | |
|---|---|---|
| | நீளம் (கி.மீ) | தொகை (ரூ.கோடியில்) |
| 2007–08 | 3,643.05 | 439.67 |
| 2008–09 | 2,691.76 | 379.17 |
| 2009–10 | 1,495.57 | 200.09 |
| மொத்தம் | 9,316.68 | 1,018.93 |


















# ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சீரமைப்புத் திட்டம்

மாநிலத்தில் உள்ள 22,000 ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிகள் மற்றும் 4,500 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைக்கும் பணிகள் அந்தந்த கிராம ஊராட்சிகளில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும்போது படிப்படியாக மேற்கொள்ளப் படுகின்றன. பழைய மற்றும் பழுதடைந்த ஓடு / அஸ்பெஸ்டாஸ் கூரைகளுக்கு பதிலாக புதிய ஓடுகளைக் கொண்டும், கான்கிரீட் கூரை கட்டடங்களில் பழுதடைந்த தள ஓடுகளுக்கு பதிலாக புதிய தள ஓடுகளை அமைத்தும், கூரைகள், சுவர்கள் மற்றும் தரைகளில் எற்பட்டுள்ள விரிசல்களை சரி செய்தும், உடைந்த சன்னல்கள் மற்றும் கதவுகள் மாற்றப்பட்டும், கட்டடங்களுக்கு சுண்ணாம்பு மற்றும் வண்ணங்கள் பூசப்பட்டும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடங்கள் முழுவதுமாக புதுப்பொலிவுடன் விளங்கும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம்**

| ஆண்டு | அனைத்து கிராம மறுமலர்ச்சித் திட்ட கிராம ஊராட்சிகளில் உள்ள பள்ளிக் கட்டடங்களின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 2006–07 & 2007–08 | 9,547 | 104.25 |
| 2008–09 | 4,432 | 69.30 |
| 2009–10 | 4,124 | 67.56 |
| மொத்தம் | 18,103 | 241.11 |



# பிற திட்டங்களை ஒருங்கிணைத்தல்

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராம ஊராட்சி ஒவ்வொன்றுக்கும் கணிசமான நிதி ஒதுக்கீடாக ரூ.20 லட்சம் வழங்கப்பட்டாலும், அந்த நிதியுடன் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம், முழு சுகாதார இயக்கம் போன்ற பிற ஊரக வளர்ச்சித் திட்டங்கள் ஒருங்கிணைக்கப்படுவது மட்டுமின்றி வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத்துறை, கால் நடை பராமரிப்புத் துறை, பால்வளத் துறை, பட்டு வளர்ச்சித் துறை, நெடுஞ்சாலைத் துறை, பொதுப்பணித் துறை, சமூக நலத் துறை போன்ற இதர துறைகள் மூலமாக செயல்படுத்தப்படும் திட்ட நிதிகளும் ஒருங்கிணைக்கப்பட்டு அந்த கிராம ஊராட்சியின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு வித்திடப்படுகிறது. அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.60 லட்சம் முதல் ரூ1 கோடி வரையான நிதிக்குவிப்பு ஒவ்வொரு ஊராட்சிக்கும் உறுதி செய்யப்பட்ட விவரங்களைக் கீழ்காணும் அட்டவணையில் காணலாம்.

**அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – ஒருங்கிணைக்கப்பட்ட இதர திட்டங்கள் மற்றும் நிதிக் குவிப்பு**

| வ. எண் | ஆண்டு | அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட கிராம ஊராட்சிக்கான சராசரி ஒருங்கிணைக்கப் பட்ட நிதி (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1 | 2006–07 | 0.84 |
| 2 | 2007–08 | 0.88 |
| 3 | 2008–09 | 1.04 |
| 4 | 2009–10 | 1.10 |

# முடிவுரை

ஊரக வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதில் ஒரு புதிய பாதையை அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் வகுத்துக் கொடுத்துள்ளது. நிதி ஆதாரங்களை ஒவ்வொரு ஆண்டும் மொத்தமுள்ள 12,618 கிராம ஊராட்சிகளுக்கும் பகிர்ந்து அளித்தால் ஒவ்வொரு ஊராட்சிக்கும் குறைந்த அளவே நிதி கிடைக்கும். அதற்கு மாற்றாக ஒவ்வொரு ஆண்டும் ஐந்தில் ஒரு பங்கு ஊராட்சிகளைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் ரூ. 20 இலட்சம் என்ற அளவில் கணிசமாக ஒதுக்கப்படும் நிதியினைக் கொண்டு பெரிய பணிகளை எடுத்துச் செய்ய இயலும். ஒவ்வொரு ஆண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட குறிப்பிட்ட கிராம ஊராட்சிகளில் மட்டுமே இத்திட்டம் செயல்படுத்தப்படுவதால், திட்டப் பணிகளை விரைவாகவும் தரமாகவும் நிறைவேற்றிட முடிகிறது.

இத்திட்டத்தின்கீழ், தனிநபர் வருமானத்தின் ஏறுவரிசைப்படி கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டதால் குறைந்த வருவாய் கொண்ட கிராம ஊராட்சிகள் முன்னுரிமை பெற்றன. விருப்பு வெறுப்பில்லாமல் அமைந்த இந்தத் தேர்வு முறை அனைவரின் பாராட்டையும் பெற்றது.

2006–07 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட பொழுதே அடுத்த ஐந்தாண்டுகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் ஊராட்சிகளின் ஆண்டுவாரியான பட்டியல் முடிவு செய்யப்பட்டுவிட்டது குறிப்பிடத்தக்கதாகும். இதன்மூலம் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகள் அந்தந்த நிதியாண்டின் துவக்கத்திலேயே முறையாகத் திட்டமிட்டு பிற திட்டங்களின் நிதி ஆதாரங்களை அதிகளவில் ஒருங்கிணைக்கவும் முடிகிறது.

‘கிராமம்தோறும் நல்ல சாலைகள், அதன் வழியெங்கும் அழகிய கட்டிடங்கள் – இது கிராம வளர்ச்சி.
‘கிராமம் தோறும் நூலகம், அதனருகே ஓர் உடற்பயிற்சி மையம்’ – இது கலைஞர் கண்ட மறுமலர்ச்சி.
இவ்விரண்டையும் ஒருங்கே கொண்டது அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்.

மத்திய அரசுத் திட்டங்களின் இறுக்கமான விதிமுறைகள், கிராம ஊராட்சிகள் தங்களின் சட்டபூர்வமான கடமைகளை ஆற்றிடத் தேவையான நிதியை அளிப்பதில்லை. மேலும் அவற்றின் உள்ளூர்த் தேவைகளை நிறைவேற்றிடவும் அனுமதிப்பது இல்லை.

இக்குறைகளைக் களையும் விதமாக அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டமானது கிராம ஊராட்சிகள் தங்கள் சட்டப்பூர்வமான கடமைகளை ஆற்றிட ரூ. 15 இலட்சம் நிதியினையும், உள்ளூர்த் தேவைகளை விருப்பப் பணிகளாக நிறைவேற்றிட ரூ. 5 இலட்சம் நிதியினையும் அளிக்கிறது.

மாண்புமிகு துணை முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு, ஊரக வளர்ச்சிப் பாதையில் பிற மாநிலங்களைக் காட்டிலும் பல படிகள் முன்னேறி இருப்பதோடு, அவர்தம் சிந்தனையில் உருவான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் தமிழ்நாட்டு கிராமங்களின் நிலத்தோற்றத்தையே மாற்றியமைத்துள்ளது என்றால் அது மிகையாகாது.